# 'உதாரணம்'



அநேக கதைகளை நாம் படித்தாலும் இது ஒரு உண்மை சம்பவம். இதை நம் முடைய வாழ்க்கைக்கு ஒரு உதாரணமாக வைத்துக் கொள்வோம்.

சீனாவின் வடக்கு பகுதியில் உள்ள தியன்ஜின் என்ற இடத்தில் ஜேம்ஸ் டன்லாப் லிட்டல் என்ற லண்டன் மிஷினரி குடும்பத்தில் எரிக் கென்ற்ரி லிட்டல் என்பவர் ஜனவரி மாதம் 1902ம் ஆண்டு இரண்டாவது பிள்ளையாக பிறந்தார். 1920-ல் கல்லூரியில் சேர்ந்த இவர் விளையாட்டுகளில் தன்னை உட்படுத்தியிருந்தார். ரக்பி (Rugby) மற்றும் ஓட்டப்பந்தயத்தில் தனக்கு நாட்டம் இருந்ததால், அதில் அதிக கவனம் செலுத்திய அவர், நாளடைவில் ஓட்டப்பந்தயத்திற்கு மாத்திரம் தன்னை ஈடுபடுத்தினார்.

அதிக கடின உழைப்பிற்கு பின்பு ஒலிம்பிக் போட்டியில் 100 மீட்டர் ஓட்டத்தில் ஓட தன்னை தயார்படுத்திக்கொண்டார். இப்படியாக பாரிஸ் ஒலிம்பிக்கில் 1924 ல் வாய்ப்பு பெற்று முதல் சுற்றில் வெற்றி பெற்றார். இப்படியாக தகுதி சுற்றில் வெற்றிபெற்ற இவர் இறுதி சுற்றிற்குள் நுழைந்தார்.

இறுதி சுற்று ஞாயிற்றுகிழமை வந்தது. அது அவருக்கு சற்று கசப்பை கொடுத்தது. ஏனென்றால் அவர் ஒரு தேவ மனிதன். ஆகவே தன்னுடைய உள்ளத்தில் ஞாயிற்றுக்கிழமைகளில் ஆலயத்திற்கு போக வேண்டும். அது தேவனுடைய நாள். ஆகவே அந்த நாளில் ஓடக்கூடாது என்ற தீர்மானத்தோடு இருந்தார்.

எரிக் கென்ற்ரி லிட்டல் தன்னுடைய பயிற்சியாளரை அணுகி தான் ஓட்டத்தில் ஓட முடியாது என தன்னுடைய தீர்மான நிலைமையை உணர்த்தினார். ஆனால் அவரோ, இது முட்டாள் தனமாக இருக்கிறது.. என்று கடிந்து கொண்டார். அவர் ஓட வில்லை என்ற செய்தி காட்டுத் தீ போல பரவியது. தேசப்பற்றுயில்லாதவர் என்று புலம்பின செய்தித்தாள்கள்.

இவைகள் ஒன்றும் இவருடைய சமாதானத்தை கெடுக்க முடியவில்லை. தேவனுக்காக எடுத்த முடிவுகளில் அவர் பின் வாங்கவும் இல்லை.

400 மீட்டர் ஓட்டம் இன்னும் தொடங்காமல் இருந்ததால் தன்னுடைய பயிற்சியாளரிடம் தன்னை அதில் அனுமதிக்க கேட்டுக்கொண்டார். அவரோ, 100 மீட்டர் ஓட பழக்கப்பட்டவர்கள் 400 மீட்டர் ஓட முடியாது. ஆகவே அது உன்னால் சாத்தியமாகாது என்றார். ஆனால் இவரோ தேவன் மேல் விசுவாசம் வைத்து, நான் விசுவாசிக்கும் இயேசுவால் முடியும் என்பதை எடுத்து இயம்பினார்.

இப்படியாக தனக்கு ஓட ஒரு வாய்ப்பு கிடைத்தது.

நடந்தது என்ன தெரியுமா? 100 மீட்டர் ஓட்டத்தில் எரிக் கென்ற்ரி லிட்டல் தேவனை கனப்படுத்தினார். தேவன் அவரை 400 மீட்டர் ஓட்டத்தில் கனப்படுத்தினார் ஆமென்.

400 மீட்டர் ஓட்டத்தில் தங்க பதக்கத்தையும் 200 மீட்டர் ஓட்டத்தில் வெங்கலப் பதக்கத்தையும் தேவன் பெற அனுக்கிரகம் பாராட்டினார்.

அவரது பயிற்சியாளர் அவரை உயர்த்தி மகிழ்ந்தார். தேசம் அவரை வாழ்த்தியது. அவரை குற்றம் சாட்டிய செய்திகள் அவரை புகழ ஆரம்பித்தது.

அருமையான தேவ பிள்ளைகளே, நம்முடைய ஒவ்வொரு விஷயத்திலும் தேவனை கனப்படுத்துவோமா!... தேவன் நம்மை கனப்படுத்துவார்.

என்னைக் கனம்பண்ணுகிறவர்களை நான் கனம் பண்ணுவேன்; என்னை அசட்டைபண்ணுகிறவர்கள் கனஈனப்படுவார்கள் என்று கர்த்தர் சொல்லுகிறார்.
1சாமு-2:30

தேவன் தாமே உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக! ஆமென்.

அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன். சங்-91:15

நீ என் பார்வைக்கு அருமையானபடியினால் கனம்பெற்றாய்; நானும் உன்னைச் சிநேகித்தேன், ஆதலால் உனக்குப் பதிலாக மனுஷர்களையும், உன் ஜீவனுக்குஈடாக ஜனங்களையும் கொடுப்பேன். ஏசா-43:4